அகில இந்திய வானொலி
திருச்சிராப்பள்ளி

# ஆகாசவாணி செய்திகள்

01.45 pm

07.12. 2024

## தலைப்புச் செய்திகள்

1. நாட்டில் மேம்பட்ட போக்குவரத்து வசதிகளை வழங்க மத்திய அரசு உறுதிபூண்டிருப்பதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. முப்படை வீரர்களின் கொடிநாள் நிதிக்கு மக்கள் தாராளமாக நிதி வழங்க பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் வலியுறுத்தியுள்ளார்.

3. தமிழகத்தில் ஃபெஞ்ஜல் புயலால் பாதிக்கப்பட்ட விழுப்புரம் மாவட்டத்தில் மத்திய நிபுணர் குழுவினர் இன்று நேரில் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

4. தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வுபகுதி இன்று உருவானதாக வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

5. ஆசிய கோப்பை ஜுனியர் மகளிர் ஹாக்கி போட்டிகள் மஸ்கட்டில் இன்று தொடங்குகின்றன.

## இனி விரிவான செய்திகள்

□□□□□□□

பிரதமர்

நாட்டின் பல்வேறு மாநிலங்களில் 85 புதிய கேந்திரிய வித்யாலயா பள்ளிகள் தொடங்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியதற்கு பிரதமர் திரு.நரேந்திரமோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

அனைவரும் பள்ளி கல்வியை பெறுவதற்கு வகைசெய்யும் அரசின் இம்மாபெரும் திட்டத்தால் ஏராளமான மாணாக்கர் பயனடைவதோடு, புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும் என்று தமது சமூக வலைதளப்பதிவில் கூறியுள்ளார்.

4-ம் கட்ட டெல்லி மெட்ரோ திட்டப்பணிகளுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியதற்கும் பாராட்டு தெரிவித்துள்ள பிரதமர், நாட்டில் மேம்பட்ட போக்குவரத்து வசதிகளை வழங்க மத்திய அரசு உறுதிபூண்டிருப்பதாக குறிப்பிட்டார்.

இதனிடையே தமிழகத்தில் தஞ்சை, தேனி மாவட்டங்களில் 2 கேந்திரிய வித்யாலயா பள்ளிகள் தொடங்க அனுமதி வழங்கப்பட்டதற்கு தமிழக மக்கள் சார்பாக நன்றி தெரிவிப்பதாக மத்தியதகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் கூறியுள்ளார்.

□□□□□□□

நிர்மலா சீதாராமன்

**பட்ஜெட்டிற்கு முந்தைய ஆலோசனை கூட்டத்தின்** இரண்டாவது கட்டமாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் வேளாண் விவசாய சங்கங்களுடன் இன்று புதுதில்லியில் பேச்சுவார்த்தை மேற்கொண்டார்.

விவசாயிகளின் நலன் சார்ந்த திட்ட செயலாக்கம் குறித்த வேளாண் நிபுணர்களின் கருத்துக்களை அமைச்சர் கேட்டறிந்தார்.

நிதித்துறை இணையமைச்சர் திரு.பங்கஜ் சவுத்ரி, நிதித்துறை செயலர் மற்றும் தலைமை பொருளாதார ஆலோசகர் உள்ளிட்ட உயரதிகாரிகள் இதில் பங்கேற்றனர்.

□□□□□□□

கொடிநாள்

**முப்படை வீரர்களின் வீரம், துணிச்சல், தியாகங்கத்திற்கு** தலைவணங்குவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

முப்படைகளின் கொடிநாள் தினம் இன்று கடைபிடிக்கப் படுவதை ஒட்டி அவர் வெளியிட்டுள்ள செய்தியில் நாட்டிற்காக முப்படையினர் ஆற்றிய அளப்பறிய சேவையை நினைவுகூறும் இந்நாளில் நாட்டு மக்கள் தாராளமாக கொடிநாள் நிதி வழங்க கேட்டுக்கொண்டார்.

நாட்டின் பாதுகாப்பில் இன்றியமையா தூண்களாக திகழும் முப்படை வீரர்களுக்கு கொடிநாள் நிதி வழங்குவது நம் கடமையாகும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இத்தினத்தை ஒட்டி அரியலூர் உட்பட தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் கொடிநாள் நிதி வசூல் பணிகளை ஆட்சித் தலைவர்கள் இன்று தொடங்கி வைத்தனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கொடிநாள் நிதி வசூலை இன்று தொடங்கிவைத்த மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன், 2020-21ஆம், ஆண்டுகளில் 5 லட்சம் ரூபாய்க்கும் மேல் கொடிநாள் நிதி வசூல் செய்த அலுவலர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.

மக்களிடமிருந்து பெறப்படும் கொடிநாள் நிதி முன்னாள் படைவீரர் மற்றும் அவர்தம் குடும்பத்தினரின் நலனுக்காக வழங்கப்படுகிறது.

□□□□□□□

நட்டா – காசநோய்

**காசநோயை வேரோடு களைவது தொடர்பான 100 நாள்** தீவிர இயக்கத்தை மத்திய சுகாதார குடும்பநலத்துறை அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா, ஹரியானா மாநிலம் பஞ்ச்குலாவில் இன்று தொடங்கி வைத்தார்.

நாடுமுழுவதும் 347 மாவட்டங்களில் இந்த இயக்கம் செயல்படுத்தப்படுகிறது.

காசநோய் இல்லா பாரதத்தை உருவாக்குவதற்கான அணுகுமுறையை இந்தியா முனைப்புடன் மேற்கொண்டிருப்பதாக அமைச்சர் தமது சமூக வலைதளப்பதிவில் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடியின் சீரிய தலைமையில் காசநோயை அகற்றுவதற்கான அனைத்து முயற்சிகளும் முழுவீச்சில் மேற்கொள்ளப்படுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

திருச்சி, உறையூர் நகர்ப்புற சுகாதார மையத்தில் மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.மு.கே.நேரு காசநோய் இயக்கத்தை தொடங்கி வைத்தார்.

தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மாநில சமூகநலத்துறை அமைச்சர் திருமதி. கீதாஜீவன், காசநோய் ஒழிப்பு முகாமை தொடங்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியின் ஒருபகுதியாக முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு மருத்துவ முகாமை தொடங்கிவைத்த அமைச்சர் 20 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தேசிய காசநோய் தடுப்பு 100 நாள் தீவிர பிரச்சார இயக்கத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.சரயு இன்று தொடங்கி வைத்தார்.

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் காசநோய் விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் இன்று திருமதி.அழகுமீனா இன்று தொடங்கி வைத்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

□□□□□□□

**ஹிந்தி மொழி**

ஹிந்தி மொழியை இளைஞர்கள் உலகளவில் கொண்டுசெல்ல வேண்டியதன் அவசியத்தை மத்திய அமைச்சர் திரு.சர்பானந்த சோனோவால் வலியுறுத்தி உள்ளார்.

சென்னையில் தக்ஷிண பாரத் ஹிந்தி பிரச்சார சபையின் பட்டமளிப்பு நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அமைச்சர், ஹிந்தி மொழியின் மூலம் தேசப்பிதா மகாத்மா காந்தியடிகளின் கொள்கைகளை முன்னெடுத்துச் சென்று அனைவரையும் ஒருங்கிணைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

பிராந்திய மற்றும் மண்டல மொழிகளுடன் ஹிந்தி மொழி கலந்திருப்பதே அதன் சிறப்பாகும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

□□□□□□□

**உதயநிதி ஸ்டாலின்**

கிராமப்புற இளைஞர்கள் சர்வதேச விளையாட்டு போட்டிகளில் பங்கேற்க தமிழகஅரசு உறுதுணையாக இருக்கும் என துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

வேலூர் காட்பாடியில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சியில் இன்று பேசிய அவர், விளையாட்டு துறையில் சாதிக்க நினைக்கும் இளைஞர்களுக்கு பொருளாதாரம் தடையாக இருக்கக் கூடாது என்பதற்காக பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருவதாக கூறினார்.

இந்நிகழ்ச்சியில் வேலூர், தர்மபுரி, கிரு'ணகிரி, நீலகிரி மாவட்டங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 400 பயனாளிகளுக்கு 131 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை அவர் வழங்கினார்.

□□□□□□□□

**ராஜேஷ் குப்தா**

**தமிழகத்தில் ஃபெஞ்ஜல் புயலால் பாதிக்கப்பட்ட** விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருவண்ணாமலை மாவட்டங்களை ஆய்வுசெய்யும் பணிகளை மத்திய குழுவினர் இன்று தொடங்கியுள்ளனர்.

மத்திய உள்துறை அமைச்சகத்தின் இணை இயக்குநர் டாக்டர் ராஜேஷ் குப்தா தலைமையிலான 7 பேர் கொண்ட குழுவினர் இந்த ஆய்வை மேற்கொண்டுள்ளனர்.

முதல்கட்டமாக விழுப்புரம் மாவட்டத்தில் ஏற்பட்ட பாதிப்புகளை இன்று பார்வையிட்டு விவசாயிகளின் கருத்துக்களை இக்குழுவினர் கேட்டறிந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

**.. வாய்ஸ் ..**

தொடர்ந்து பிற மாவட்டங்களின் புயல் பாதிப்பு சேதங்களை இன்றும் நாளையும் நேரில் ஆய்வு செய்து அதன் அடிப்படையில் மத்திய அரசிடம் இக்குழுவினர் அறிக்கை சமர்ப்பிக்க உள்ளனர்.

இந்த அறிக்கையின் அடிப்படையில் தமிழகத்திற்கு மத்தியஅரசு உரிய நிதி ஒதுக்கீட்டினை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக புயல் நிவாரண பணிகளுக்காக மத்திய அரசு 944 கோடியே 80 லட்சம் ரூபாய் நிதியை நேற்று விடுத்தது குறிப்பிடத்தக்கது.

□□□□□□□□

**பெரியகருப்பன்**

**ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட** சிறுவணிகர்கள், நடைபாதை வியாபாரிகள் மற்றும் சிறுதொழில் புரிவோர்களுக்கு கூட்டுறவுத்துறை சார்பில் 10 ஆயிரம் ரூபாய் முதல் ஒருலட்சம் ரூபாய் வரை கடனுதவிகள் வழங்கப்படும் என மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.மு.சு.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், விழுப்புரம், கடலூர் உள்ளிட்ட 6 மாவட்டங்களில் புயலால் பாதிக்கப்பட்ட சிறுவணிகர்கள் இதற்கு விண்ணப்பித்து பயன்பெறுமாறு கேட்டுக்கொண்டார்.

இத்திட்டத்தின்கீழ் இலக்கு எதுவும் நிர்ணயிக்கப் படவில்லை என தெரிவித்த அமைச்சர், புயல் பாதிப்பு பகுதிகளில் அரசு தனிகவனம் செலுத்தி வருவதாகவும் கூறினார்.

□□□□□□□□

**தங்கம் தென்னரசு**

**தமிழகத்தில் நீர்நிலைகளை தூர்வாரி நன்னீர் குளங்களாக** மாற்றும் பணிகள் நடைபெற்று வருவதாக மாநில நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

சிவகாசியில் செய்தியாளர்களிடம் பேசியஅவர், நீர் நிலைகளை தூர்வாரி, சீரமைத்து, பாதுகாக்கும் அரசின் நடவடிக்கைகளுக்கு தனியார் அமைப்புகள் ஒத்துழைப்பு வழங்கி வருவதாகவும் கூறியுள்ளார்.

ஃபென்ஜல் புயல் நிவாரண நிதியாக 944 கோடி ரூபாய் ஒதுக்கிய மத்திய அரசுக்கு நன்றி தெரிவிப்பதாக கூறினார்.

□□□□□□□□

**மகேஷ் பொய்யாமொழி**

**தமிழகத்தில் இடைநிலை பள்ளி ஆசிரியர் காலி** பணியிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில பள்ளிக்கல்வி துறை அமைச்சர் திரு. அன்பில்மகேஷ்பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

திருச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், 3 ஆயிரம் ஆசிரியர்களுக்கு தேர்வு நடத்தப்பட்டு சான்றிதழ் சரிபார்க்கும் பணிகள் நிறைவடைந்துள்ளதாக கூறினார்.

ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் முன்னுரிமை வழங்க வேண்டும் என வழக்கு தொடர்ந்ததால் பணிநியமனத்தில் தாமதம் ஏற்படுவதை சுட்டிக்காட்டிய அமைச்சர், எனினும் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கான பணி ஆணைகள் விரைவில் வழங்கப்படும் என்றார்.

□□□□□□□□

**தர்மபுரி வாய்ஸ்**

**தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு அருகே** பஞ்சப்பள்ளி சின்னாறு அணை முழு கொள்ளளவை எட்டியதை அடுத்து உபநீர் வெளியேற்றப்படுவதால் கரையோர மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு ஆட்சித்தலைவர் திருமதி.சாந்தி அறிவுறுத்தியுள்ளார்

இதுகுறித்து எமது செய்தியாளர்

□□□□□□□□

**வானிலை**

**தென் கிழக்கு வங்கக்கடலின் மத்திய பகுதியில் புதிய** காற்றழுத்த தாழ்வுபகுதி இன்று உருவானதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

இது அடுத்த 24 மணி நேரத்தில் மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து, வலுவடைந்து வரும் 11-ம் தேதிவாக்கில் இலங்கை தமிழக கடற்கரையை நோக்கி நகரக்கூடும் என்று இம்மையம் கூறியுள்ளது.

இதன் காரணமாக வரும் 10-ம் தேதி டெல்டா மாவட்டங்கள் மற்றும் உள் மாவட்டங்களில் பரவலாக கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீனவர்கள் வரும் 11-ம் தேதிவரை ஆழ்கடல் பகுதிக்கு செல்வதை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

□□□□□□□□

**ஹாக்கி**

**ஆசிய கோப்பை ஜுனியர் மகளிர் ஹாக்கி போட்டிகள்** மஸ்கட்டில் இன்று தொடங்குகின்றன.

இந்திய தனது முதல் போட்டியில் நாளை பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

□□□□□□□□

**கிரிக்கெட்**

**அடிலைடில் இந்தியாவிற்கு எதிரான பார்டர் கவாஸ்கர்** கோப்பைக்கான 2-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 2-ம் நாளான இன்று ஆஸ்திரேலியா தனது முதல் இன்னிங்சில் சற்றுமுன் 7 விக்கெட் இழப்பிற்கு 314 ரன் எடுத்திருந்தது.

ஆஸ்திரேலியா தற்போது 134 ரன் முன்னிலையில் உள்ளது.

இந்தியா முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 180.

□□□□□□□□

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**